James McGranahan



பாமாலை 453 ஜெய ராஜ கோடி

1 ஜெய ராஜ கோடி ஏற்றிக் காட்டியே

யுத்தம் செய்யச் செல்லுவோம்;

வெற்றிமாலை சூடி ஜெயம் பெறவே

பூரிப்போடு பாடுவோம்.

பல்லவி

செல்லுவோம்! வெல்லுவோம்!

நல் மீட்பர் நாமம் மூலமாய்

வெற்றி சிறப்பார், ஆளுவார்,

பூமி எங்கும் ஜோதியாய்.

2 எதிர்ச் சேனை சீறிப் பாய்ந்து வரினும்

ராஜ கொடி காட்டுவோம்;

திரள் கூட்டமே போராட்டம் செய்யினும்

வெற்றி வேந்தராகுவோம்

3 எந்த த் தேச ஜாதி பாஷைக்காரரும்

சுவிசேஷம் கேட்பதால்

இயேசு நாதர் மாண்பாய் ஆளும் காலமும்

மா சமீபமானதால்

4 அந்த நல்ல காலம் வந்த உடனே

ராஜரீகம் பண்ணுவார்;

அவபக்தி யாவும் ஒழிந்திடவே

நீதி நிலை நாட்டுவார்.